செ.வெ.எண்: 786/2016 நாள்: 09.11.2016

**பத்திரிக்கைச் செய்தி**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்த பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மானியங்களுடன் கூடிய கடனுதவி, ஈடு உத்திரவாத நிதியம் மற்றும் முயற்சி மூலதன நிதியம் போன்ற திட்டங்கள் அரசின் கொள்கையளவில் வடிவு பெற்றுள்ளன. இதன் ஒரு பகுதியாக சிறந்த தொழில் முனைவோர்களை கண்டறிய சென்னையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தொழில் மற்றும் வணிகத்துறையின் மாவட்ட தொழில் மையம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட குறு மற்றும் சிறு தொழில் சங்கமும் இணைந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலையில் தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் நடத்த இருக்கிறது. சுயமாக தொழில் தொடங்க விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட தொழில் மற்றும் சேவைத் தொழில் செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் ஆண் / பெண் அனைவரும் இந்த முகாமில் கலந்துகொள்ளலாம். தக்கலையில் நூருல் இஸ்லாம் பல்கலைக்கழகத்தில் உள்ள கூட்ட அரங்கில் 11.11.2016 அன்று காலை 10.00 மணிக்கு தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் நடைபெறும்.

முதல் கட்டமாக சொந்தமாக தொழில் தொடங்குவதில் உள்ள நன்மைகள், தொழில் வாய்ப்புகள், தொழிலை தெரிவுசெய்வது எப்படி? தொழில் துவங்கவிருக்கும் முனைவோருக்கு அரசு மற்றும் பிற நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் மற்றும் திட்டங்கள் ஆகியன பற்றி இம்முகாமில் விவரிக்கப்படும். மேலும் இந்த முகாமில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் குறித்தும் விபரங்கள் தெரிவிக்கப்படும். பயிற்சி முகாமின் இறுதியில் தொழில் தொடங்க விரும்பும் நபர்களின் பெயர்கள் பெறப்பட்டு அவர்கள் இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அழைக்கப்படுவர்.

இரண்டாம் கட்ட 5-நாள் பயிற்சியில் இந்த தொழில்முனைவோர்களுக்கு தொழில் வணிக வடிவம் மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும்.

தகுதி உள்ளவர்கள் அரசு வழங்கும் மானிய திட்டங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அதன்மூலம் நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும். இப்பயிற்சிகளில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் மாவட்ட தொழில் மையங்களும் இணைந்து செயல்படும். எனவே, அரசு திட்டங்கள் பற்றிய விளக்கங்களும் அதன் மூலம் பயன்படும் வழிவகைகளும் ஏற்படுத்தி தரப்படும் என்பதையும் தெரிவித்து கொள்கிறோம். ஆகையால் மேற்கண்ட பயிற்சியில் பயன்பெற விரும்பும் நபர்கள் தங்களின் முகவரி, கல்வித்தகுதி, மற்றும் தொலைபேசி எண் முதலிய விபரங்களுடன் மேற்கண்ட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை **8754590961** என்ற அலைபேசி எண்ணிலும், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் அவர்களை **04652-260008 மற்றும் 9367523037** ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்**

**கன்னியாகுமரிமாவட்டம்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.